பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி09 வெள்ளிக்கிழமை 21.02.2025 கதிர் 105

## இது ரகசியம் அல்ல!

பாதாள உலகக் கும்பல் தலைவரான கனேமுல்ல சஞ்சிவவின் பரபரப்பான கொலை தொடர்பில் மேலும் பரபரப்பான செய்திகள் வெளிவரத்தொடங்கிவிட்டன. சிங்களப் ஊடகங்களில் நாளும் பொழுதுமாக அது பற்றிய கதைகள் சுடச்சுட பரபரப்புக் குறையாமல் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

பாதாள உலகக் கும்பல் தலைவர் சஞ்சீவ குமார சமரரத்ன எனப்படும் கணேமுல்ல சஞ்சீவவை 15 ☞ 2

## நீதிமன்றுக்கு அப்பால் விசாரணை தீவிரமாக ஆராய்கிறது ஆளும்தரப்பு

பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளை எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்கு அப்பால் முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து நீதி அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் வினவிய போதே அவர் இதனை கூறினார்.

நீதிமன்றத்தில் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் உரிய நடைமுறைகளுக்கமைய பாதுகாப்பு படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்திற்குள் துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியில்லை எனவும் உட்பிரவேசிக்கும் சட்டத்தரணிகள் ☞ 8

## நீதிமன்றக் கொலை வழக்கு பயங்கரவாதச் சட்டத்தின் கீழ்

கனேமுல்ல சஞ்சீவ கொலைசம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படும் என்று கொழும்பு குற்றவியல் பிரிவு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

கொழும்பு குற்றவியல் பிரிவு இது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. கொலை சம்பவத்தின் துப்பாக்கிதாரி மற்றும் அவர் தப்பிச் சென்ற வாகனத்தின் சாரதி என சந்தேகிக்கப்படும் இருவரும் தற்போது கொழும்பு குற்றவியல் பிரிவின் காவலில் உள்ளனர்.

## பொதுமக்கள் உதவி நாடும் பொலிஸார்

கனேமுல்ல சஞ்சீவ கொலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த பெண் சந்தேகநபரைக் கைது செய்யப் பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பெண்ணைப் பற்றிய தகவல் தெரிந்தால் கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பணிப்பாளர், கொழும்பு குற்றவியல் பிரிவு - 071-8591727

பொறுப்பதிகாரி, கொழும்பு குற்றவியல் பிரிவு - 071-8591735

சந்தேகநபர் தொடர்பான தகவல்கள்

பெயர்: சிங்புர தேவகே இஷாரா செவ்வந்தி

வயது: 25 வயது

தே.அ.அ.இல:- 995892480ஏ

முகவரி: 243/01, நீர்கொழுப்பு வீதி, ஜய மாவத்தை, கடுவெல்லேகம

## கனேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் பொலிஸ் கான்ஸ்டபிளும் நேற்று கைது

கனேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வரும் பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் கொழும்புக் குற்றவியல் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு தலைமையக பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரிவில் நீதிமன்றப் பணிகளைக் கவனித்துவந்த சந்தேகநபர், பாதெனிய பகுதியைச் சேர்ந்த ☞ 8

## வியாழனன்று வடக்கில் பாடசாலை விடுமுறை

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் மகா சிவராத்திரிக்கு மறுநாள் வியாழக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். அதற்குப் பதிலாக மார்ச்மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை பாடசாலை நடைபெறும் என்றும் ஆளுநர் அறிவித்துள்ளார். ☞ 8

# பாதாள உலகத்தை முற்றாக முடிப்போம்

### ஜனாதிபதி அறிவிப்பு

பொதுமக்களின் பாதுகாப்புக்காக உள்ள உத்தியோகபூர்வநிறுவனங்களில் சிலநபர்கள் வரையில் பாதாள உலகத்தின் செயற்பாடுகள் விரிவடைந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகவும், எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகத்தை முழுமையாக முடிவுக்குக்கொண்டுவர சகல நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்காக சிறிது காலம் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பத்தாவது நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் ☞ 2

## கஜேந்திரகுமார் வரவேற்பு

அரியாலை சிந்துப் பாத்தி மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனித எச்சங்கள் வெளிவந்த நிலையில் அது குறித்து யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்க விடையம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிந்துப்பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் வெளிவந்தமை தொடர்பில் அறியக் கிடைத்ததும் நாங்கள் சென்று பார்வையிட்டோம்.

அங்கு காணப்பட்ட எச்சங்களை பார்க்கும்போது எங்கிருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்ட எச்சங்களாகப் பாகங்கள் கலக்கப்பட்டவையாகக் காட்சி தந்தன. இந்நிலையில் யாழ்ப்பாண நீதி மன்றம் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி இருப்பது நம்பிக்கை தரும் நிலையில், தேவை ஏற்படின் சர்வதேசதரத்திலான பகுப்பாய்வுகள் ☞ 2

## சம்பூரில் சூரிய மின் உற்பத்தி திட்டங்களை தொடங்க முடிவு

திருகோணமலை சம்பூரில் 50 மெகாவோற் (கட்டம் I) மற்றும் 70 மெகாவோற் (கட்டம் II) சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

இரண்டு அரசுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் திட்டமாக இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின்சார கூட்டுத்தாபனத்தின் கூட்டு தொழில்முயற்சி கம்பனியால் நிர்மாணித்தல், உரிமை வகித்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் திருகோணமலை சம்பூரில் 50 மெகாவோற் (கட்டம் I) மற்றும் 70 ☞ 2

## சிறையிலேயே கைதிகளிடமிருந்து நீதிவான் வாக்குமூலம் பெறலாம்

### அடுத்த மாதம் வருகிறது புதிய சட்ட வரைவு

கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல் சிறைச்சாலையில் இருந்தவாறு சாட்சியம் பெற்றுக் கொள்வதற்கு குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையை திருத்தம் செய்யும் வகையில் அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதம் அச்சட்டவரைபு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதேநேரம் நீதிமன்றத்துக்குள் பிரவேசிக்கும் சட்டத்தரணிகளையும் பரிசோதனை செய்வது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடியுள்ளோம் என்று நீதி மற்றும் தேசிய ☞ 8

### வித்தியா படுகொலை வழக்கில்

## சந்தேகநபருக்கு உதவி, அவரை விடுவித்த இரு பொலிஸ் அதிகாரிகளுக்கு தண்டனை

### 4 ஆண்டுகள் சிறை

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கில் முதன்மை சந்தேகநபர் சுவிஸ்குமாருக்கு உதவிய குற்றத்திற்காக முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் ஆகிய இருவருக்கும் தலா நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி ☞ 8

## மக்கள் எதிர்ப்பை சமாளிக்க விரைவில் தயாராக இருங்கள்

### ஆளும்தரப்புக்கு கவிந்த எம்.பி. எச்சரிக்கை

தேசிய பாதுகாப்பு தொடர்பான வகுப்பிற்கு கதிரையொன்றை எடுத்துவருமாறு எமக்கு அழைப்பு விடுத்த ஜே.வி.பி.யினரின் இயலாமையால் இன்று நாட்டு மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. விரைவில் வரவிருக்கும் மக்கள் எதிர்ப்பினை எதிர்கொள்வதற்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பை பெறத் தயாராகுமாறு ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மில்லியன் ரூபாய் ஒப்பந்தத்தில் சுட்டுக் கொன்றதாக கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தார் என்று கூறப்படுகின்றது.

கொலை செய்வதற்கு பல நாட்களுக்கு முன்பு துப்பாக்கிதாரி புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்திற்கு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தமை விசாரணைகளின்போது பொலிசாருக்கு தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பாதாள உலக உறுப்பினர்களான கெஹல்பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த மற்றும் அவிஷ்க ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் கணேமுல்ல சஞ்சீவவைக் கொன்றதாக அவர் தெரிவித்திருக்கிறாராம்.

துப்பாக்கிதாரி, இந்தக் கொலை 15 மில்லியன் ரூபாய் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடத்தப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் 200,000 ரூபாயை ஊதியமாகத் தனக்கு வழங்கினர் எனவும் விசாரணை அதிகாரிகளிடம் கூறியுள்ளாராம்

நீதிமன்ற வளாகத்திற்குள் துப்பாக்கியைக் கொண்டு வந்த பெண் தன்னிடம் அதைக் கொடுத்த பிறகு, தனது இடுப்புப் பகுதியில் மறைத்து வைத்துக்கொண்டார் என்றும் அவர் கூறியிருக்கிறாராம். துப்பாக்கியைக் கொடுத்த பெண்ணை சிறிது காலமாகவே தெரியும் என்றும் அவருடன் நெருக்கமான உறவு இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்குப்பிறகு, வாடகைவாகன செயலி மூலம் வாடகைக்கு வாகனம் ஒன்றை எடுத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு அருகில் இருந்து நீர்கொழும்புக்கு அருகிலுள்ள ஒரு பகுதிக்குச் சென்றதாக சந்தேகநபர் விசாரணை அதிகாரிகளிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

தன்னை அழைத்துச் செல்ல கார் ஒன்று அவ்விடத்திற்கு வருவதாகக் கூறியபோதும் அவ்வாறு வாகனங்கள் எதுவும் வராததால் வாடகைக் காரை அமர்த்திப் பயணம் செய்தார் என துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கூறியுள்ளார்.

பின்னர் துப்பாக்கியைக் கொண்டு வந்த பெண்ணுடன் கடை ஒன்றுக்குச் சென்று தான் ஆடைகள் வாங்கினார் என்றும் பின்னர் நீர்கொழும்புக்கு அருகிலுள்ள ஒரு பகுதியில் இருந்து வாடகைக்கு வானில் கல்பிட்டிக்குப் பயணம் செய்து, இந்தியாவுக்குத் தப்பிச் செல்லத் தயாரானர் என்றும் அவர் பொலிசாரிடம் கூறியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், தன்னிடம் இருந்த போலி அடையாள அட்டைகள் அனைத்தும் அவிஷ்க என்ற குற்றவாளியால் தயாரிக்கப்பட்டவை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதேபோல், கல்கிஸ்ஸை, வட்டரப்பல பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைகளையும் தானே செய்தார் என்றும் அவர் வெளிப்படுத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கணேமுல்ல சஞ்சீவ புதன்கிழமை புதுக்கடை இலக்கம் 5 நீதிவான் நீதிமன்றத்தின் பிரதிவாதிகள் கூண்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவருக்கு எதிரான மூன்று வழக்குகளில் ஆஜராவதற்காக பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையிலிருந்து விசேட பாதுகாப்பின் கீழ் அவர் அழைத்து வரப்பட்ட நிலையில் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிறப்புப் பிரிவு குற்றவாளியான கணேமுல்ல சஞ்சீவவின் வழக்கு, புதுக்கடை, நீதிமன்றம் இலக்கம் 5 இல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அங்கிருந்த மீதமுள்ளவர்கள் அகற்றப்பட்டு கதவுகள் மூடப்பட்டன.

இதற்கிடையில், சட்டத்தரணி போல் வேடமிட்டிருந்த துப்பாக்கிதாரி விசாரணைக் கூண்டில் இருந்த கணேமுல்ல சஞ்சீவவை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு, துப்பாக்கியை அவ்விடத்தில் விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, கணேமுல்ல சஞ்சீவவின் பாதுகாப்பிற்கு வந்து, குறித்த கதவுகளுக்கு அருகில் நின்றிருந்த பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளிடம், 'உள்ளே துப்பாக்கிச் சூடு நடக்கிறது' என்று கூறிவிட்டு துப்பாக்கிதாரி ஓடியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புத்தளம் மற்றும் கோனஹேன முகாம்களின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின்போது, புத்தளம் நோக்கி வேனில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டார்.

வேன் ஒன்றை நிறுத்திச் சோதனை செய்தபோது, சிசிடிவி காட்சிகளில் இருந்த தோற்றமுடைய ஒருவரை புலனாய்வாளர்கள் விசாரித்த நிலையில், அவர்தான் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்பது தெரியவந்தது.

கைதுசெய்யப்பட்ட துப்பாக்கிதாரி, மஹரகம, தம்பஹேன வீதியில் வசிக்கும் 27 வயதுடைய சமிந்து தில்ஷான் பியுமங்க கந்தனாராச்சி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவரது பயணப் பொதியில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது, கொலைக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை அழைத்துச் சென்ற வேன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

பின்னர், துப்பாக்கிதாரி அணிந்திருந்த சட்டத்தரணி ஆடை குறித்து விசாரித்தபோது, குறித்த ஆடைகள் அடங்கிய பையை கொச்சிக்கடை- ரிதீவெல்ல வீதியில் விட்டுச் சென்றதாகத் தெரிவித்துள்ளார். அவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனராம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பாதாள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது கூட்டம் அவருடைய தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

நீதிமன்ற வளாகங்களில் பாதுகாப்புத் தொடர்பில் இங்கு கருத்துத் தெரிவித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, இது தொடர்பில் முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், எதிர்காலத்தில் சட்டத்தரணிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் சோதனையிடுவதற்கும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களுடன் கூடிய காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பில் இங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாடு முழுவதிலும் முப்படையினரின் பாவனையில் உள்ள காணிகள் தொடர்பில் மீண்டும் மதிப்பாய்வு மேற்கொண்டு காணிகளை விடுவிப்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இங்கு பதிலளித்தார்.

இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வணிகங்களை சுற்றுலாத் துறையில் மேலும் வினைத்திறன் மிக்க முதலீடுகளாக மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு வினவினர். இதற்கமைய, எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆய்வு நடத்தி, பொருளாதார நன்மைகளுக்காக அவற்றைப் பயன்படுத்துவது குறித்துத் தீர்மானிக்க முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சில வழிபாட்டுஸ்தலங்களை அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். மதவாதம் மற்றும் இனவாதம் என்பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப்படவேண்டும் என ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் உள்ள மக்களின் உண்மையான தேவைக்கு அமைய இந்தச் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும் என்றும், குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குவதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், தேசிய அனர்த்தக் குழுவை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கான நடவடிக்கையை விரைவில் பூர்த்திசெய்யுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி, கௌரவ பாதுகாப்பு பிரதியமைச்சர் (மேஜர் ஜெனரல்) அருன ஜயசேகர (ஓய்வுபெற்ற), அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வுபெற்ற), முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள், நாடாளுமன்ற பதவியணித் தலைமை அதிகாரியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# வலி.வடக்கு, கேப்பாபிலவு காணிகளை விடுவியுங்கள்

## பாதுகாப்பு அமைச்சு சார் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன்

யாழ்ப்பாணம் வலி- வடக்கில் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் அத்துடன் விடுவிக்கப்படும் காணிகளில் மக்கள் குடியிருப்புக்களை நிர்மாணித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென பாதுகாப்பு அமைச்சுசார் குழுக் கூட்டத்தில் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் பாதுகாப்பு அமைச்சுசார் குழுக் கூட்டம் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சுசார் குழு கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், 'யாழ் - வலி. வடக்கில் 2009 ஆண்டு பொலிஸார் மற்றும் முப்படையினர் வசம் 23 ஆயிரம் ஏக்கர் காணி காணப்பட்டது. இக்காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்தன.

இதன் பிரகாரம் 21 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போது 2640 ஏக்கர் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ளது. இக்காணிகள் மக்கள் பயன்படுத்தும் வகையில் விடுவிக்கப்பட வேண்டுமென கோரினார்.

அத்துடன் வலி. வடக்கில் அண்மைக் காலத்தில் விடுக்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு குடியிருப்பு இல்லையென்ற காரணம் சொல்லப்படுகின்றது. எனவே விடுவிக்கப்பட்ட காணிகளில் வீடு கட்டிக்கொள்ள அனுமதிக்க முன்வரவேண்டும்.

அத்துடன் பலாலி வசாவிளான் சந்தி வரையான வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படவேண்டுமெனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் முல்லைத்தீவு கேப்பாபிலவு காணி விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் கடற்தொழில் அமைச்சர் முன்வைத்த நிலையில் கூட்டத்தில் கலந்துக் கொண்ட இராணுவ உயர் அதிகாரிகள் விடுவிக்கப்படக்கூடிய பகுதிகளை ஆளும்தரப்பிடம் ஒப்படைக்கவுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

# அதானியுடன் மீண்டும் பேச்சு நடத்துவதாக முடிவேதுமில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

அதானியுடன் மீண்டும் பேச்சு நடத்துவதாக ஆளும்தரப்பு எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பொருளாதார நிலைமைக்கமைய எவ்வாறு குறைந்த விலையில் மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியிருக்கிறோம் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாம் தேசிய வர்த்தகர்களிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து தேசிய தேவைப்பாட்டுக்கமைய நியாயமான விலையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான முன்மொழிவையே எதிர்பார்க்கின்றோம். அதன் ஊடாக மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் மின்னுற்பத்தியை முன்னெடுக்க முடியும்.

மின்னுற்பத்திச் செலவுகளைக் குறைப்பது தொடர்பிலேயே நாம் பேச்சு நடத்தியிருக்கின்றோம். அமைச்சரவையில் அதானி வேலைத் திட்டத்தை இரத்து செய்வது தொடர்பில் எவ்வித பேச்சுக்களும் முன்னெடுக்கப்படவில்லை. மின் அலகொன்றுக்கான விலையைக் குறைப்பதற்கான பேச்சுக்களையே நாம் முன்னெடுத்திருந்தோம். இந்தியாவுக்கு வழங்கும் விலையிலேனும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தோம். எவ்வாறிருப்பினும் அதானி நிறுவனம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. இதுவே அவர்கள் தமது வேலைத்திட்டத்தை நிறுத்துவதற்கு பிரதான காரணியாக அமைந்தது.

வேறொரு நிறுவனம் இதனைவிடக் குறைந்த விலையில் மின் உற்பத்தியை மேற்கொள்ள முன்வந்துள்ளது. இதனையே நாமும் எதிர்பார்க்கின்றோம்.

எமது பொருளாதார நிலைமைக்கமைய எவ்வாறு குறைந்த விலையில் மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவது என்பது தொடர்பிலேயே நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். அதானி வெளியேறியதை அடிப்படையாகக் கொண்டு சகல முதலீட்டாளர்களும் வெளியேறுகின்றனர் எனச்சிலர் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு எதுவும் இல்லை. மேலும் பல முதலீட்டாளர்கள் வருகை தந்துகொண்டிருக்கின்றனர். அதானியுடன் மீண்டும் பேச்சு முன்னெடுப்பது குறித்து எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றார்.

## கஜேந்திரகுமார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படவேண்டும்.

தற்போதைய ஆளும்தரப்பு போர்க்கால உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளைக் கோர மாட்டோம் உள்ளக விசாரணைகளே இடம்பெறும் எனக் கூறி வரும் நிலையில் குறித்த புதைகுழி போர்க் காலத்தில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டவர்களின் மனித எச்சங்களாக இருக்கலாம் என நாம் சந்தேகிக்கிறோம்.

ஆகவே தற்போதைய ஆளும்தரப்பிடம் நாங்கள் கோரிக்கை முன் வைக்கிறோம் குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை என்றார் அவர்.

## சம்பூரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெகாவோற் (கட்டம் II) சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்காக இலங்கை அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுக்கு இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

திருகோணமலை சம்பூரில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த நிலக்கரி மின்னுற்பத்தி நிலைய திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் கூட்டு தொழில்முயற்சி கம்பனியாக நிறுவப்பட்ட திருகோணமலை வலுசக்தி நிறுவனத்தின் முலம் உத்தேச 50 மெகாவோற் சூரிய மின்னுற்பத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உத்தேச திட்டத்தை அமுல்படுத்துவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண அபிவிருத்திக்கு இளைஞர்களே தேவையாம்



வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு நிதி பிரச்சினை இல்லை. அபிவிருத்தியை முன்கொண்டு செய்வதற்கான இளைஞர்களே தேவைப்படுகிறார்கள் என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மன்னார், மடு, இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை தரமுயர்த்தி உயர் தர வகுப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ந.கோபுதலைமையில் புதன்கிழமை இடம்பெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

மாணவர்களை உயர்த்த முடியும் என்கின்ற தூரநோக்கு இப் பாடசாலையின் அதிபரை போல் இருக்கும் பட்சத்தில் அதனை சாதிக்க முடியும். இன்று பல இடங்களில் நேரான தூரநோக்கு இல்லாமல் இருக்கிறது. இன்று பலரும் எதிர்மறையாக சிந்திப்பவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எப்போதும் எங்களால் முடியாது. எங்களால் இதனை சாதிக்க இயலாது என்று கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயராமைக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது. பல அலுவலர்களும் அவ்வாறான ஓர் எதிர்மறையான மனம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். எதையாவது செய்ய கூறும் போது எமக்கு அது இல்லை. இது இல்லை என்று கூறுகின்ற ஒரு மனப்போக்கு அவர்களுக்கு காணப்படுகின்றது. அவர்கள் அவ்வாறு இருந்து பழகி விட்டார்கள். வேலைகளை செய்வதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை.

தற்போது நமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் விசேட நிதியை ஒதுக்கி இருக்கின்றது. அது உள்ளூர் வீதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தை தவிர ஏனைய நான்கு மாவட்டங்களில் நான் அரசாங்க அதிபராக இருந்ததன் காரணமாக எனக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மூளை முடுக்குகள் அனைத்தும் நன்கு தெரியும். எனது அலுவலகங்களுக்கு தெரியாத பல விடயங்களை நான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக இந்த இடத்திலே இன்ன விடயம் இருக்கிறது என்பதை கூட இடரீதியாக அவர்களுக்கு சொல்லி இருக்கிறேன். அந்த அளவிற்கு எனக்கு இந்த பிரதேசங்கள் மிகவும் தெரிந்தவை.

எங்களைப் பொறுத்த வரைக்கும் மிகவும் வறுமையில் உள்ள மக்களினுடைய வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதாகவே இருக்கின்றது. அதனை அடைவதற்கு நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

இந்தப் பாடசாலையினுடைய அதிபர் நேராக சிந்திக்கின்ற ஒருவராக இருக்கின்றார். அதேபோலவே இந்த பிரதேசத்தின் விவசாய போதனாசிரியர் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் மிகவும் துடிப்பான இளைஞனாக காணப்பட்டார். அவர் மிகவும் செயற்பாடு உள்ளவராக காணப்பட்டார். அவ்வாறான இளைஞர்களே அபிவிருத்தி செய்வதற்காகத் தேவைப்படுகிறார்கள். நிதி எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் எவ்வாறு செயற்படுத்த போகின்றோம் என்பது தான் இங்கு இருக்கின்ற பிரச்சினை.

இதுவரை எங்களுக்கு பல பிரச்சினைகள் இருந்தது. குறிப்பாக மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. மக்கள் அலுவலகங்களுக்கு சென்றால் அங்கு தங்களுடைய செயற்பாடுகளை செய்ய முடியவில்லை என்கின்ற பிரச்சினைகள் இருந்தது. மக்களுடைய தேவைகளை கூட அறிய முடியாமல் இருந்தது. அவை மாற்றப்படுகின்றன.

நாங்கள் நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களையே முன்னேற்ற வேண்டும். அரசாங்கம் கூட கிராமபுற வீதிகளை புனரமைக்க வேண்டும் என கூறுகின்றது எனத் தெரிவித்தார். 100

# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்

(அபு அலா)

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம்.ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சன பங்கேற்புடன் இடம்பெற்ற இக்குழுக்கூட்டத்தில் 'ஒவ்வொரு விவசாயியும் அரசாங்கத்தின் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு குறைந்தது 300 கிலோ நெல்லை வழங்க வேண்டும்.' என அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார்.

2024 ஆம் ஆண்டு விவசாயக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் களநிலை பிரச்சினைகள் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பில் இக்கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு தீர்வுகளும் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

மேலும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பிரதேச செயலக விவசாயக் குழுக்கூட்டத்திலிருந்து மாவட்ட செயலகத்துக்கு முன்மொழியப்பட்ட பிரச்சினைகளும் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் எடுக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.சுப்ரமணியம், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் கலாநிதி தி.கருணைநாதன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாசன், மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினை நேரில் சந்தித்த ஜீவன் தொண்டமான்

(கேதீஸ்)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் புதன் கிழமை தமிழ்நாடு தி.மு.க தலைமையகத்தில் சந்தித்தார்.



தமிழக முதலமைச்சரை சந்தித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் அவருடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

# மாளிகைக்காடு, சாய்ந்தமருது, மாவடிப்பள்ளி பள்ளிகளுக்கு ஈச்சம் பழங்கள் பகிர்ந்தளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சவூதி அரேபியா அன்பளிப்பு செய்த ஈச்சம் பழங்கள் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் இருந்து சாய்ந்தமருது, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச பள்ளிவாயலுக்கு கிடைக்க பெற்றிருந்தது.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற ஈத்தம் பழங்கள் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் வைத்து சாய்ந்தமருது, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச பள்ளிவாசல்களுக்கு அந்தந்த பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களிடம் விநியோகம் செய்யப்பட்டன.





இந்த ஈத்தம்பழ விநியோகம் முஸ்லிம் சமய கலாசார திணைக்கள காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரினால் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

ஒரு பள்ளிவாயலுக்கு 18 கிலோ ஈத்தம்பழம் விநியோகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் பொருளாளர் எம்.எம்.சலீம், மாளிகைக்காடு ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் நூருல் ஹுதா உமர், ஸாலிஹீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஜெமீல் ஹாஜியார், மாவடிப்பள்ளி ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர் என பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# செம்மணி வழக்கு மீண்டும் உயிர் பெற்றெழுமா?

அரியாலை (செம்மணி வெளி) சிந்துப்பாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழி தோண்டியபோது மனித எலுப்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பது இப்போது நீதிமன்றத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. யாழ்ப்பாண நீதிவான் நேரில் என்று எலும்பு எச்சங்களைப் பார்வையிட்டுள்ளார். இதன் மூலம் இந்த எலும்பு எச்சங்கள் குறித்து நீதிமன்ற விசாரணைகள், ஆய்வுகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

சிந்துப்பாத்தி மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனித எச்சங்கள் வெளிவந்த நிலையில் அது குறித்து யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம்செலுத்திஇருப்பதைதமிழ்தேசியமக்கள்முன்னணியின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் வரவேற்றுள்ளார்.

''சிந்துப்பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் வெளிவந்தமை தொடர்பில் அறியக் கிடைத்ததும் நாங்கள் சென்று பார்வையிட்டோம். அங்கு காணப்பட்ட எச்சங்களை பார்க்கும்போது எங்கிருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்ட எச்சங்களாக, பாகங்கள் கலக்கப்பட்டவையாகக் காட்சி தந்தன. இந்த நிலையில் யாழ்ப்பாண நீதிமன்றம் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி இருப்பது நம்பிக்கை தரும் நிலையில், தேவை ஏற்படின் சர்வதேச தரத்திலான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தற்போதைய ஆளும்தரப்பு போர்க கால உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளைக் கோர மாட்டோம் உள்ளக விசாரணைகளே இடம்பெறும் எனக் கூறி வரும் நிலையில் குறித்த புதைகுழி போர்க் காலத்தில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டவர்களின் மனித எச்சங்களாக இருக்கலாம் என நாம் சந்தேகிக்கிறோம்.

ஆகவே தற்போதைய ஆளும்தரப்பிடம் நாங்கள் கோரிக்கை முன்வைக்கிறோம் குறித்த மனிதப் புதை குழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை'' என்றார் அவர்.

ஒரு மயானத்தில் மனித எலும்புகள் காணப்பட்டமை குறித்து நீதிமன்ற விசாரணை வரைக்கும் போகவேண்டிய அவசியம் என்ன என்பது குறித்து இன்றைய இளைய தலைமுறையினர் யோசிக்கலாம். அது ஒரு காலத்தில் யாழ்ப்பாண மக்களின் உயிரைப் புதைத்த இடம் என்பது வரலாற்றுப் பதிவு. அரசியல்வாதிகளும் ஏனையவர்களும் வசதியாக மறந்துபோன பதிவும்கூட அது.

1995இல் யாழ். குடாநாட்டைக் கைவிட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு வன்னிக்குள்பின்வாங்கியபின்னர், 1996ஆடிமாதநடுப்பகுதியில்முல்லைத்தீவு தரைப் படை முகாமை முற்றாகத் தாக்கி அழித்தது. முதற்றடவையாக இந்தச் சண்டையில் படையினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை இழந்தனர். அதற்கான எதிர்வினையை அனுபவிக்கவேண்டியவர்களா இருந்தவர்கள் யாழ்ப்பாணத்து இளைஞர்களே. அப்போது யாழ். மவாட்டக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இருந்தார். பின்னர் அநுராதபுரத்தில் குண்டுத் தாக்குதலில் இவர் கொல்லப்பட்டார்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் பின்னர் யாழ்ப்பாணத்தில், படையினரின் முழுக் காட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் நாளாந்தம் இளைஞர்களும் இளம் பெண்களும் காணாமற்போகத் தொடங்கினர். வீதிகளில் சென்றவர்கள் படையினரின் சோதனை நிலையங்களில் திடீரென மாயமாகினர். இரவு நேரங்களில் வீடுகளுக்குச் சென்ற படையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்றவர்களுக்கு அதன் பின்னர் என்ன நடந்தது என்று தெரியவில்லை. அன்று ஒட்டுக் குழுக்களாக இருந்த தமிழ் ஆயுதக் குழுவினரும் படையினருடன் கூட்டுச் சேர்ந்து இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டனர்.

இப்படி ஒரு சில ஆண்டுகளில் சுமார் 900 இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் காணாமற்போனார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் உத்தியோகபூர்வ விசாரணைகளோ நடவடிக்கைகளோ இல்லாததால் அது குறித்த உண்மையான தகவல்கள் இல்லை. 1998ஆம் ஆண்டு செம்மணியில் பாடசாலை மாணவி கிருஷாந்தி விசாரணைக்கு என்று மறிக்கப்பட்டு வன்புணரப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரைத் தேடிச் சென்ற அவரது குடும்பத்தினரும் அயலவரும்கூடக் கொன்று புதைக்கப்பட்டனர். இந்த வழக்கில் படையினர் குற்றவாளிகள் என்பது நிரூபிக்கப்பட்டது. தண்டனை பெற்ற ராஜபக்சே என்கிற சிப்பாய், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் அதனால் ஆத்திரமுற்று செம்மணிப் புதைகுழிகள் குறித்த உண்மையை வெளிப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பல நூற்றுக்கணக்கில் கொன்று செம்மணியில் புதைக்கப்பட்டனர் என்ற உண்மையை அவர் தெரிவித்தார். அது குறித்து தனியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. அவர் அடையாளம் காட்டிய இடங்களில் இருந்து 15 மனித உடல் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. உலக ஊடகங்களின் கவனத்தையும் ஈர்ந்திருந்த இந்த விவகாரம் பெரிளவில் பேசப்பட்டு, செம்மணி மனிதப் புதைகுழி என்ற புகழ்பெற்றது.

ஆனால், இந்தவழக்கில் குற்றஞ்சாட்ப்பட்டபடையினரின் கோரிக்கைக்கு ஏற்ப, வழக்கு அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு பின்னர் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. அந்த வழக்குக்கு என்ன நடந்தது என்று இன்று ஒருவருக்கும் தெரியாது. அனைவரும் அதனை மறந்தும்விட்டனர். தமிழ் அரசியல்வாதிகளுக்கு செம்மணியை விடப் பெரியளவிலான மனிதப் புதைகுழி விவகாரம் முள்ளிவாய்க்காலில் கிடைத்தமையால் அவர்களும் செம்மணி குறித்து அக்கறைப்படுவதில்லை.

இப்போது சிந்துப்பாத்தி மீண்டும் செம்மணிப் புதைகுழி குறித்த கதையாடல்களைத் தொடக்கியுள்ளது. இனியாவது செம்மணிப் புதைகுழி வழக்குகள் மீள உயிர்பெற்று அங்கு புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா? அவர்களின் அப்பாவி உறவினர்கள் ஏக்கத்தோடு 29 வருடங்களாக ஏக்கத்தோடு காத்திருக்கிறார்கள். மிகத் தாமதமாகவேனும் அவர்களுக்கு நீதி கிடைக்குமா?

# ஊர் கூட்டி தேர் இழுக்க

**என்.சத்திய மூர்த்தி**

நாட்டின் நிதி அமைச்சரான ஜனாதிபதி அனுர குமார திசநாயக்காவின் கன்னி பட்ஜெட் அல்லது நிதிநிலை அறிக்கையை யார் வரவேற்கிறார்களோ, இல்லையோ, குறிப்பாக வடக்கே வேரூன்றி போன தமிழர் தலைமைகளால் அதனை ஜீரணிக்க முடியாது. அது வழமையான அரசியல் எதிரி என்ற நிலையில் மட்டும் தோன்றும் எதிர்ப்பு அல்ல. அதற்கும் அப்பால் சென்று, தங்களது மிச்ச-சொச்ச ஆளுமையையும் எதிர்காலத்தையுமே ஆட்டிப்பார்க்கும் பட்ஜெட் என்ற எண்ணவோட்டமே இதற்குக் காரணமாகும்.

குறிப்பாக இனப்பிரச்சினையின் ஓர் அழியாத சின்னமாக இன்றளவும் நிற்கும் யாழ்பாணம் பொது நூலக அபிவிருத்திக்கு அனுரவின் பட்ஜெட்டில் பத்து கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது, ஆளும் ஜேவிபி-யை ஒரு புதிய கோணத்தில் தமிழ் மக்களிடையே காட்டுவதற்கான முயற்சி. பத்து அல்லது ஏன் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர்கூட 'இந்த பருப்பு வேகாது' என்று தென்னிலங்கை அரசியல்வாதிகளை தமிழ் மக்களால் ஒதுக்கி தள்ள முடிந்தது.

அல்லது, தமிழ் தலைமைகளால் ஒருமித்து அடையாளம் காட்டப்பட்ட தென்னிலங்கையைச் சார்ந்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வந்தார்கள். ஆனால், இப்போதைய களநிலை வேறு. ஈ.பி.டி.பி. போன்ற தமிழர் கட்சிகளுக்கும், தென்னிலங்கையை சார்ந்த ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சுதந்திர கட்சிக்கும் வாக்களித்து வந்த தமிழ் மக்கள் தொகுதி, தற்போது ஒரு சேர ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் நிற்கிறது.

யாழ்பாண நூலகத்திற்கான நிதி ஒதுக்கீடு, தமிழ் மக்களின் உணர்வு சார்ந்த விடயம். ஆனால், அனுர அத்தோடு நின்று விடவில்லை. அரசின் வரவு- செலவு திட்டத்தில், வடக்கே பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை மற்றும் மாங்குளத்தில் கைதொழில் பூங்கா, போதாததற்கு தெங்கு முக்கோண வலயம் ஆகிய வளர்ச்சி திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அனைவருக்கும் நன்றி

இந்தத் திட்டங்கள் திறம்படச் செயல்படுத்தப்பட்டால், அதன் தேர்தல்-அரசியல் சார்ந்த பயன், ஆளும் கட்சியையே சென்றடையும். வேறொன்றும் இல்லையென்றாலும், கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற முன்னிலையை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் தங்கவைத்துக் கொள்ளலாம். இந்த இரண்டு மாவட்டங்களிலும், குறிப்பாக மக்கள் பாவலைக்கான சாலைகளை சீரமைக்கவும் கணிசமான தொகை இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

போதாதற்கு, முல்லைதீவு வட்டுவாகல் பாலத்திற்கு நூறு கோடி ரூபாய் பட்ஜெட்டில் அறிவித்தமைக்கு தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனே, அனுர முதல் இந்த அரசில் உள்ள சுவர், தூண் என அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார். இதன் பின்னரும் தமிழ் கட்சி தலைமைகள் தங்கள் மக்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அதிலும் குறிப்பாக, ரவிகரன், கட்சியில் சிறீதரன் தலைமையிலான அதி தீவிர அணியில் பங்குபெற்றுள்ளார் என்பதை கருதும்போது, அவரது கருத்தைத் தமிழ் மக்களின் கருத்தாக ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. என்ன, மாறிவிட்ட உட்கட்சிச் சூழலில், ரவிகரனின் கருத்து தமிழ் அரசின் கருத்தல்ல என்று தலைமையில் இருக்கும் எதிரணியினரான சிவஞானம், சுமந்திரன் தரப்பினர் கூறலாம்.

ஆனால், பட்ஜெட் குறித்த விடயங்களில் கட்சித் தலைமையைவிட நாடாளுமன்றத் தலைமையின் கூற்றே முக்கியமானது என்ற எதிர்வாதம் முன்னெடுக்கப்படலாம். அதற்கு அப்பாலும் சென்று, கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் கருத்தை அதன் பேச்சாளரான சிறீநேசனே முன்வைக்க முடியும் என்ற கருத்தும் வெளிப்படலாம். அடுத்த கட்டத்தில், மாறுபட்ட கட்சிச் சூழலில், நாடாளுமன்றக் குழுத் தலைவராக சிறீதரன் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டமையே கேள்விக்கு உள்ளாக்கப்படலாம்.

## அக்கபோர் அரசியல்

இவ்வாறெல்லாம் நடந்தேறினால், யாருக்கு நன்மை? அனுரவின் வரவு-செலவு திட்ட அறிவிப்புகளை வரவேற்றுள்ள வடமாகாண ஆளுநர் வேதநாயகன், நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலும் வட மாகாணத்திற்கே இந்த ஆண்டு அதிக திட்டங்களும் நிதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அவர் சுட்டிக்காட்டியது போல, பட்ஜெட் உரையிலேயே வட மாகாணத்திற்கு அரசு அதிகாரிகள் கோரிய அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டி உள்ளார்.

அதிலும் குறிப்பாக, வட மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முழுமையாக செலவு செய்து, மேலும் நிதி கோரும் அளவிற்கு. அனைத்து தரப்பினரின் செயல்பாடுகளும் இருக்கவேண்டும் என்று ஆளுநர் கூறியுள்ளார். வேதநாயகன் அரசியல் பேசவில்லை. அரசியல் ரீதியாக செயல்படமாட்டார் என்றும் நம்பலாம். ஆனால், அரசு இயந்திரம் சிறப்பாகச் செயல்பட்டால், அதன் அரசியல் ஆதாயம் ஆளும் கட்சிக்கே போய் சேரும் என்பதே உண்மை.

இதனை எல்லாம் உணர்ந்து தானோ என்னவோ, தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவரான சிவஞானம், உள்ளூராட்சி தேர்தலில் கூட்டாக களமிறங்கவே தாங்கள் விரும்புகின்றனர் என்று மீண்டும் உறுதிபடுத்தி உள்ளார். பதில் தலைவராக நியமிக்கப்படும் முன்னரே அவர் இவ்வாறன கருத்தை கூறி வந்திருக்கிறார். அவருடைய கருத்துக்கு தமிழர் தரப்பினருக்கு மட்டுமானதல்ல. உள்கட்சி பூசலையும் தவிர்க்கும் வகையிலானதும்கூட.

இதனை மனதில் நிறுத்திதானோ என்னவோ, ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவிற்கு எதிராகச் செயலாற்றிய நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் மீதும் ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும் சிவஞானம் மீண்டும் உறுதி அளித்துள்ளார். இது வரவேற்கதக்க முடிவுதான் என்றாலும், இதே முடிவு, இது போன்றே ஜனாதிபதி தேர்தலில் பங்காற்றிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் பொருந்தவேண்டும் என்ற கோரிக்கை எழுவதையும் தடுக்கமுடியாது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஜனாதிபதி தேர்தலில் 'பொது வேட்பாளர்' (?) என்ற ஹோதாவில் களமிறங்கிய அரியநேத்திரனை மட்டும் கட்சியில் இருந்து விலக்கியது எந்த வகையில் நியாயமானது, என்ற கேள்வியும் எழுப்பப்படும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# ஊர் கூட்டி ...

4ம் பக்கத் தொடர்ச்சி..........

## விபரீத விளைவுகள்

எது எப்படியோ, இனியாவது, தமிழ் அரசுக் கட்சியின் உள்கட்சிப் பூசல்கள் இல்லாததாகிஒற்றுமைநிலவவேண்டும். இல்லையென்றால், உள்ளாட்சி தேர்தலில், தமிழ் அரசு கட்சியில் எந்த அணியுடன் அல்லது எந்தத் தலைவருடன் பேச்சு நடத்தவேண்டும் என்றகுழப்பம்பிறதமிழ்கட்சிகளுக்குத் தோன்றும். அதுவே, அவ்வாறான கூட்டணிஅமையாமல்இருப்பதற்கான காரணியாகவும் முடியும்.

தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லையென்றால், அதன் விளைவுகள் விபரீதமாகஇருக்கும். உதாரணத்திற்கு, இது வரை சிறீதரனுடன் மட்டுமே உரையாடி வந்த கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர், தற்போது 'சுமந்திரன் அணி'யுடன் பேச்சுவார்த்தை நடந்தினால் மட்டுமே, அரசியல் மற்றும் தேர்தல் குறித்த ஒருமித்த கருத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதுதான் நிதர்சனம்.

ஏன், சிறீதரன் அணியினரே அடக்கி வாசிக்கவேண்டும். காரணம், உள்ளாட்சி தேர்தலில் கட்சியின் வேட்பாளர் குழுக்கள் குறித்த தேர்தல் ஆணைய படிவங்களில் கைசாத்திட, பொதுசெயலாளரான சுமந்திரனுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. அதேசமயம், நாடாளுமன்றத் தேர்தலில் தனது தோல்வியையும்மனதில்கொண்டு, சுமந்திரனும் வேட்பாளர் தேர்வில் அரங்கேற்றியது போன்ற 'அணி அரசியல்' மட்டுமே செய்வாரானால், அவரையும் சரித்திரம் மன்னிக்காது.

அதுபோன்றே, சுமந்திரனைச் சீண்டிவிட்டு, அவரை அரசியல்சூனியம் ஆக்கிவிடவேண்டும்என்றுதனியாகவும் கூட்டாகவும் திட்டம் போட்டு செயல்பட்ட குழுவினரெல்லாம், தமிழ் அரசின் உள்ளேயும் வெளியேயும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அல்லது அவர்களது அரசியல் ஆளுமை இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. அதற்கு சுமந்திரன் சார்ந்த தங்களது அரசியல் முன்னெடுப்புகளே காரணம் என்று அதனைத் தொடக்கி வைத்த சுரேஷ் பிரேமசந்திரன் தொடங்கி, இன்று சிறீதரன், செல்வம் மற்றும் கஜன் ஆகியோரும் உணரவேண்டும்.

## இணக்கப்பாடு அரசியல்

இதில் பிரச்சினையே, தனி மனிதர்கள் மட்டுமல்ல. அவர்களுடன் அடையாளப்படுத்தப்படும் கொள்கைகளும்தான் சிக்கிக்கொண்டுள்ளது. உதாரணத்திற்கு, சிவிகே மற்றும் சுமந்திரன் ஆகியோர், தந்தை செல்வா காலத்திய மிதவாத அரசியலோடு அடையாளப்படுத்தப்படுகிறார்கள். மாறாக, சிறீதரன், மற்றும் வெவ்வேறு அளவுகளில் செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமசந்திரன், போன்றோர் புலம்பெயர்ந்தோர் மத்தியில் வாழும் அடிப்படைவாதிகளின் பாட்டுக்கு ஆடுபவர்கள் என்ற எண்ணம் புரையோடி உள்ளது.

இதற்கு அப்பால், கஜேந்திரகுமார், ஸ்ரீகாந்தா மற்றும் மறந்துபட்ட முன்னாள் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர், தந்தை செல்வாவின் இணக்கப்பாடு அரசியலோடு இணக்கப்பட்டவர்கள் இல்லை என்றாலும், மற்ற அணியினரை போல் போராளி பின்னணியும் போராட்ட குணமும் கொண்டவர்களும் அல்லர். இவர்கள் யாருடனும் முழுவதுமாக அடையாளப்படுத்திக்கொள்ளாத சித்தார்தன் போன்றோர் பிறிதொரு ரகம்.

இதுவரை 'எதிராளியாக' கருதி ஒதுக்கிய டக்ளஸ் தேவநந்தாவை, இப்போது சிலராவது அணைத்துக் கொள்ளதயாராவது வேடிக்கையானது. இனப்போர் முடிந்த காலம் தொட்டு, பிற தமிழ் கட்சிகளுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பிய டக்ளஸை காலம் சென்ற சம்மந்தனின் தலைமை ஏற்றுக் கொள்ளாததற்கு, சுரேஷ்; தான் காரணம் என்று கருத்து அப்போது நிலவியது என்னவோ உண்மை.

இவர்களில், சுரேஷ் மற்றும் ஸ்ரீகாந்தா போன்றோரின் அணிகளுக்கு எந்தவித தமிழ் வாக்காளர்கள் ஆதரவும் தள்போது இல்லை என்பது கண்கூடு. இதுவே, தனது வாக்காளர்களை ஆளும் கட்சிக்கு இழந்த பின்னர் டக்களஸின் நிலைமையும்கூட. அதற்காக, அவர்களை ஒதுக்கி வைத்து அரசியல் செய்யவேண்டும் என்பதல்ல பொருள். அவர்களும் விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பதே அரசியல் சாத்தியம் என்பதனைப் புரிந்து செயல்பட வேண்டும்.

## ஒற்றைச் சொல்

தற்போதைய சூழலில் இவர்கள் அனைவருமே, அரசியல் தீர்வு விடயத்தில் சமஷ்டி என்ற ஒற்றை சொல்லை சுற்றி ஒரே கருத்தைக் கொண்டுள்ளார்கள். அதேசமயம் முன்னுக்குப் பின் முரண்பட்டு அவர்கள் பேசி வருவதாலும், அதனை அனைத்து தலைவர்களுமே செயலிலும் காட்டி வருவதாலும், அவர்களுடையது ஈகோ பிரச்சினையே தவிர, கொள்கை வேறுபாடுகள் அல்ல என்பது தெளிவாகப் புரிகிறது. அல்லது, அவ்வாறாகத்தான் தமிழ் மக்கள் அவர்களை புரிந்து கொண்டுள்ளார்கள். இதனை மாற்றி, அனைத்து தமிழ் தரப்பு அரசியல்வாதிகளும் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளனர் என்பது வெறும் பத்திரிகைச் செய்தியாகவும், ஒளி ஊடக 'ரீல்' ஆகவும் மட்டுமே இருந்து விடக்கூடாது. அவர்களுடைய மனமாற்றம் உண்மையானது என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் துளிர் விடவேண்டும்.

அப்போது மட்டும்தான், தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து தங்கள் ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையில், இந்தம' தமிழ் தலைமைகளும் தேர்தல் மற்றும் பிற அரசியல்பேரணிகளைநடத்தமுடியும்.

ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும் என்பது பழமொழி. அதற்கு சமகால அர்த்தம் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு முத்தாய்ப்பான முன் முயற்சிகளை எடுப்பதற்கு சிவிகே போன்றோருக்குஅனைத்துதரப்பினரும் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

அதேசமயம், அனுரதலைமைதமிழ் மக்களின்சமகாலஅஜெண்டாவை, இன அரசியலில் இருந்து மாற்றி எழுதி, தனி மனிதனின் அன்றாட பொருளாதார தேவைகள் என்ற நிலைமைக்கு மாற்றிய பின்னர், இன்னமும் சிறீதரன், கஜன் பொன்னம்பலம் போன்றோர் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருந்தால், பத்திரிகைகளில் வேண்டுமென்றால் இடம் கிடைக்கலாம். தமிழ் மக்களின் இதயத்தில், முன்பு இழந்துவிட்ட இடத்தைமீண்டும்பெற்றுவிட முடியாது.



# பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் நியமனம்

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவிக்கு நியமனம்.

ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் மற்றும்உத்தரவின்பெயரில்தேசியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சி



வடக்கு (பருத்தித்துறை), தீவகம் தெற்கு (வேலணை), நல்லூர், வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) ஆகிய பிரதேச செயலங்களிகளின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக 18.02.2025 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

# பாவனைக்குதவாத உணவுகளைத் தேடி திருமலையில் திடீர் சுற்றிவளைப்புகள்

(அபு அலா)

திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஊடாக பொதுச் சுகாதார பரிசோதகர்களால் திருகோணமலையில் திடீர் சுற்றிவளைப்பொன்று புதன்கிழமை இடம் பெற்றது.

பொதுச் சுகாத பரிசோதகர்களால் திருகோண மலையை சேர்ந்த ஊழியர்களால் திருகோணமலை நகர பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் சுற்றி வளைக்கப்பட்டன.

இதில் பாவனைக்கு உதவாத, சமைத்த சமைக்காத உணவுகள் ஒரே குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்தமை காலவதியான பொருள்கள் ,கடைகளில் சுகாதாரம் பொருள்களின் மீதான லேபல் சம்பந்தமான பிரச்சினை போன்றவைகள் இனம் காணப்பட்டு கடை உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சில கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் பாவனைக்கு உதவாத பொருள்களும் கைப்பற்றப்பட்டன.





# சம்மாந்துறையில் புதியபுற்களை தேடிவருகின்ற காட்டு யானைகள்

(பாறுக் ஷிஹான்)

வேளாண்மை அறுவடையின் பின்னர் யானை கூட்டம் புதிதாக முளைக்கின்ற புல் இனங்களை உண்பதற்காக நாடி வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் திடீரென சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி வில்லுக்குளப் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு காலை முதல் மாலை வருகை தந்துள்ளன.

இதன்போது குறித்த யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானை குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது. புதன்கிழமை சுமார் பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என 100 இற்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன.

தினமும் அப்பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றதுடன் இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர். மேலும் இப் பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 130 இற்கும் மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகை தருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.








# மாற்று திறனாளிகளுக்கான சிஹின நிகழ்ச்சித் திட்டம்

(ஹஸ்பர்)

சிகின சிறிலங்கா திட்டம் ஊடாக மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட நிகழ்வொன்றை திருகோணமலை நூலக மண்டபத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மனிதவள வேலை வாய்ப்புத் திணைக்களமும் ஒன்றிணைந்து திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் நா.மதிவண்ணன் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதேச செயலாளர் உரையாற்றும் போது மாற்றுத்திறனாளிகளை சமூகத்துடன் இணைக்கும் திட்டங்களில் இதுவும் ஒன்று என்றும் இதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் மேலும் வலுவடைந்து தங்களின் சுய கௌரவத்தை மேம்படுத்தலாம் என்றும் கூறினர்.

ஈஸ்பிடி திட்டத்தின்கீழ் தொழில்வாய்ப்புகுள் உட்படுத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தொழில் தருணர்கள் மற்றும் தொழில் வாய்ப்பினை தேடிக் கொண்டிருக்கும் மாற்றுத்திறனாளிகள் இதற்கு உதவியாக உள்ள இளைஞர் சமூகத்தினையும் ஒன்றிணைத்து இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் வேலை செய்யும்போது எதிர்கொள்ளுகின்ற சவால்கள் தொழில் தருணர்கள் எதிர் நோக்குகின்ற சவால்கள் மற்றும் சவால்கள் தீர்வு காணுகின்ற விதம் போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின்திறன்களை விருத்தி செய்யும் வகையில் பல்வேறுபட்ட விளை யாட்டுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது

மேலும் இது போன்ற பல்வேறு திறமையுடைய மாற்றுதிறனாளிகளை தொழில்



வாய்ப்புகள் உட்புகுத்த திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரிவில் ஓஎஸ்.யு. பிரிவும் உருவாக்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.







காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# கந்தபுராணம் கூறும் பக்தி யோகம்

கந்தபுராணம் தமிழ்ச் சைவ மரபின் மாபெரும் ஆன்மிகக் களஞ்சியமாக திகழ்கிறது. இது வெறும் புராணக் காவியமாக இல்லாது, ஆழமான தத்துவ உண்மைகளை எடுத்துரைக்கும் ஒளியூற்றாகவிளங்குகிறது. ஸ்கந்தபுராணத்தின்ஓர்அங்கமாகக் கருதப்படும்கந்தபுராணம், கச்சியப்பசிவாச்சாரியார் அவர்களால் அழகிய தமிழ் செய்யுள்களால் வடிவமைக்கப்பட்டது. இந்நூல் முருகனின் வாழ்க்கை வரலாறாக இருந்தாலும், அது ஒரு உயிரின் ஆன்மிக வளர்ச்சியின் வடிவமாகவே விளங்குகிறது. இது வெறும் தேவசரிதமாக மட்டும் இல்லாமல், மனிதனின் அக அமைதிக்கும் ஆன்மிக முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் நெறியாகவும் விளங்குகிறது.

**இந்திராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவிச்**
**சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர்**
**அந்திமில் அவுணர் தங்கள் அடல் கெடமுனிந்த செவ்வேள்**
**கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே**

முருகப்பெருமான் வெறும் போர் தெய்வம் அல்ல, அவன் ஞானத்தின் உருவமாக விளங்குகின்றான்.

**ஒற்றென முன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னைப்,**
**பற்று இகல் இன்றி பராபரமுதல்வன் என்றே,**
**சொற்றனன் சொற்ற எல்லாம் துணிபு எனக்**
**கொண்டிலேனால்**
**இற்றை இப்பொழுதில் ஈசன் இவன் எனும் தன்மை**
**கண்டேன்**

முருகனின் வேல் ஞானத்தின் அடையாளமாகும். 'வேல்' என்பது 'வெல்' என்ற வினையடிப்பொறியை அடிப்படையாகக் கொண்டதாகும். வெற்றியைத்தரும்இந்தவேல், அறியாமையை அழிக்கும் ஆன்மிக ஆயுதமாகவும் விளங்குகிறது. இதுவே வேலாயுதம். வேல் என்பது வெறும் ஒரு யுத்தக் கருவியாக மட்டுமல்ல, அது இறையுணர்வை தரும் ஒரு வடிவமாகவும் கருதப்பட வேண்டும்.

**அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த அன்பால்**
**எந்தை கண்ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம் பேர்**
**தந்திடும் பனுவல் சொன்ன தன்மையால் தனிவேற்**
**பெம்மான்**
**கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக்கவலை தீர்த்தோம்**
**கந்தபுராணம் முழுவதும் வேலின் தத்துவமே ஓடிக்கொண்டு**
**செல்கிறது.**

இங்கே முருகன் போராடுவதில்லை, அவன் அறிவை விளக்குகிறான். சூரபத்மன் இருவேறு நிலைகளை அடைவது,




எவ்வாறு ஒரு உயிர், தன் அசுத்தங்களை எரித்து இறைவனில் ஒடுங்க வேண்டும் என்பதற்கான உவமையாகவே அமைகிறது.

**சூரன் ஒழிந்ததே, சோதியை காண்பதற்கு!**
**சோதியின் வெளிச்சத்தில், சூரன் காண்பதில்லையே!**

சூரபத்மன் ஒரு அரக்கனாக மட்டுமே விளங்கவில்லை; அவன் யார் என்றால், அவன் அறியாமை, அகந்தை, தன்னை உலகிற்கே மேலாக எண்ணும் தவறான எண்ணங்கள். அவன் இறைவனை எதிர்க்கிறான், ஆனால் அந்த எதிர்ப்பு உண்மையில் ஒரு போராட்டம் அல்ல; அது தன்னுணர்வு ஏற்படும் வரை ஓடிக்கொண்டே இருக்கும் பைத்தியக் கதிதான். அகங்காரம் நிறைந்த மனம் இறைவனை எதிர்ப்பது போல, பக்தியின் ஒளிக்கதிர் அதன் மீது விழும்போது, அது படிப்படியாக உருகி இறைவனாக மாறுகிறது.

முருகனின் அருள் ஆட்சி எந்த அகங்காரத்தையும் சிதைத்து பரமாத்ம நிலையை விளக்குகிறது. கச்சியப்பர் இதனை இவ்வாறு கூறுகின்றார்.

**காலமாய்க் காலமின்றிக்**
**கருமமாய் கருமமின்றி**
**கோலமாய்க் கோலமின்றி**
**குணங்களாய் குணங்களின்றி**
**ஞாலமாய் ஞாலமின்றி**
**அநாதியாய் நங்கட்க்கு எல்லாம்**
**மூலமாய் இருந்த வள்ளல்**
**மூவிரு முகங்கொண்டுற்றான்'**

கந்தபுராணத்தில் 'நான்' என்ற கருதிய உணர்வுமிக முக்கியமான பகுதி. 'நான்' என்பது 'என்' என்ற அகந்தையைக் குறிக்கும். இந்த அகந்தை இல்லாமல் ஒரு பக்தனாக இருப்பதே இறைவனுடன் இணையச் செய்யும். முருகன் தனது பாத்திரத்தால் இந்த அகந்தையை முறியடிக்கிறான். சூரன் ஒரு பொழுது முருகனின் உண்மை சொரூபத்தை காண்கிறான். அதனை கச்சியப்பர் இவ்வாறு கூறுகின்றார்.

**கோலமா மஞ்சை தன்னில்**
**குலவிய குமரன் தன்னைப்,**
**பாலன் என்று இருந்தேன் அந்நாள் பரிசு இவை உணர்ந்தி**
**லேன்யான் ,**
**மால்அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்,**
**மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ.**

சூரபத்மனின் இறுதி நிலையை கவனிக்க வேண்டும். அவன் தோற்கும் போது, அவன் முற்றிலும் அழிந்துவிடவில்லை. அவன் இறைவனிடம் சரணாகதி அடைகிறான். முருகனது தரிசனத்தை கண்ட இந்நிலையில், அகந்தை அகன்றது, ஆணவம் அழிந்தது, ஞானம் பிறந்தது.

கச்சியப்பர் இதனை இவ்வாறு கூறுகின்றார்:

**சூழுதல் வேண்டும் தாள்கள், தொழுதிடல் வேண்டும் அங்கை,**
**தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு,**
**ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்கு ஆளாகி,**
**வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே**

இப்போது வேலினால் வீழ்த்தப்பட்ட சூரபத்மன் இரு வடிவங்களை எடுக்கிறான். ஒன்று மயில், மற்று ஒன்று சேவல். மயில் என்பது மும்மலங்களையும் (அணவம், கன்மம், மாயை) தாண்டி ஆன்மிகத் திரிசரியை அடையும் உயிரின் உச்ச நிலையைக் குறிக்கிறது. சேவல் என்பது இறைமகன் என்ற உணர்வின் திரிவிழிப்பாகும். இங்கே போர் ஓய்ந்துவிட்டது; ஆனால் உண்மையில், அது ஒரு தியான நிலையாக மாறுகிறது. அதனால் தான் முருகனை வணங்கி வழிபட்டு வருபவர்கள் சேவலையும் மயிலையும் வணங்குகிறார்கள்.

**மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி**
**ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி – காஞ்சி**
**மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி – அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி**

கந்தபுராணம் முற்றிலும் சிவத்துவத்தின் வெளிப்பாடாகவே



உள்ளது. முருகன் என்றால் சிவத்தின் ஞானம். முருகன் என்றால் சிவத்தின் பிளவு. சிவனும் முருகனும் வேறல்ல என்கிறது கந்தபுராணம்.

**அருவமும் உருவமும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்**
**கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய**

கந்தபுராணம், சைவ சமயத்தின் அடிப்படையான 'பசு, பாதி, பாசம்' என்ற கொள்கைகள் முருக – சிவ பக்தியின் வழியாக நிறைவு பெறுகின்றன. அதாவது, ஆன்மா (பசு) தன்னை இறைவனில் (பதி) இணைக்க வேண்டும். ஆனால் இதற்கு இடையே இருக்கும் பாசம் (மாயை) தடையாக அமைகிறது. முருகனின் வேல் இந்த பாசத்தை துணிக்கிற ஆயுதமாக விளங்குகிறது. முருகன் வழிபாடு, இந்த பாசத்தை நீக்கி, அடியார்களை இறைவனின் அருள் நிலைக்கு அழைத்துச் செல்லும் ஒரு ஆன்மிகப் பாதையாகவே இருக்கின்றது என்பதே கந்த புராணம் கூறும் செய்தி ஆகும்.

**ஜமுனாராணி சிவலோகநாதன்**



காலைக்கதிர் Kalaikkathir

# எம்.பிக்களின் பாதுகாப்பு குறித்து தமிழ் அரசு உறுப்பினர் கவலை

நாடாளுமன்றஉறுப்பினர்களின்பாதுகாப்பு தொடர்பில் சபாநாயகர் ஊடாகப் பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சிடம் பலமுறை கோரிக்கை விடுத்துள்ள நிலையிலும் இதுவரையில் அதற்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்ஸ்ரீநாத்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு என்பது தற்போது பிரச்சினையாகியுள்ளது. அந்தளவுக்கு நாட்டில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குஅண்மைக் காலமாக பல அசௌகரியமான சம்பவங்கள் நேர்ந்துள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பலமுறை சபாநாயகர் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சிடம்தெரிவித்திருந்தபோதும் இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு சபாநாயகர் பொறுப்புக்கூறவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குஏதேனும்அசம்பாவிதங்கள் நடைபெற்ற பின்னர் பாதுகாப்பை வழங்குவதைவிட அதற்கு முன்னர் பாதுகாப்பு வழங்குவதே சிறந்தது. 10ஆவது நாடாளுமன்றம் கூடி 100 நாட்கள் நிறைவடையவுள்ள நிலையில் இன்னும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை - என்றார்.

## சந்தேகநபருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியா சிவலோகநாத-ன் படுகொலை வழக்கின்முக்கியசூத்திரதாரியானசுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை கைது செய்த பின் விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் ஆகியோருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சுவிஸ்குமார்என்பவரைச்சட்டமுறையற்ற வகையில் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்க உதவியதன் மூலம் தண்டனைச் சட்டக் கோவை 209ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் ஒன்றைப் புரிந்தமை மற்றும் அதற்கு ஒத்துழைத்ததன் மூலம்109ஆம்பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 209ஆம் பிரிவின் கீழான குற்றம் ஒன்றைப் புரிந்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவருக்கும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

வழக்கின் இரண்டாவது எதிரியான முன்னால் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன்வெளிநாடுதப்பிச்சென்றமையினால் அவரின்றியே அவருக்கு எதிரான விசாரணைகள் இடம்பெற்றன.

வழக்குத் தொடுனர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரிகளான லலித் ஏ ஜெயசிங்க மற்றும் ஸ்ரீகஜன் மீதான இரண்டு குற்றச்சாட்டுகளையும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநர் நிரூபிந்துள்ளதால் இருவரையும் குற்றவாளிகளாக மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன், 2015 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். மறுநாள் அவரது சடலம் பற்றைக் காணிக்குள் இருந்து எடுக்கப்பட்டது. இந்த நிலையில் வழக்கின் சந்தேகநபர்களைப் பொலிஸாரும் பொதுமக்களும்பிடித்தனர். அதில் சுவிஸ்குமார் என்று அழைக்கப்படும் சசிக்குமார் என்பவரையும் ஊர் மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவரை யாழ்ப்பாணம் அழைத்து வந்த உபபொலிஸ்பரிசோதகர் ஸ்ரீகஜன், அன்றைய தினம் இரவு பொலிஸ் காவலிலிருந்து அவரை விடுவித்தார்.

புங்குடுதீவுமாணவிபடுகொலைவழக்கின் முக்கியசூத்திரதாரியாககூறப்படும்சுவிஸ்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அதுதொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்இருந்துபின்னர்பிணையில் விடுவிக்கப்பட்டார். உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன்தலைமறைவாகிஉள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று சட்ட மா அதிபரின் நடவடிக்கைக்காக விடப்பட்டது. இதேவேளை, மாணவி படுகொலை வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயம் முன்னிலையில் இடம்பெற்றது.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் பாலேந்திரன் சசிமகேந்திரன், அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு இடம்பெற்று சுவிஸ்குமார் உள்ளிட்ட 7 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

## கனேமுல்ல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கனேமுல்ல சஞ்சீவ துப்பாக்கிச் சூடு தொடர்பாக தற்போது தலைமறைவாகியுள்ள சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி வீரசிங்கவுடன் அவர் தொலைபேசி உரையாடலில்ஈடுபட்டதற்கானஆதாரங்களை விசாரணைஅதிகாரிகள்கண்டுபிடித்துள்ளனர்.

முதற்கட்ட வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், கைது செய்யப்பட்ட அதிகாரி மேலதிக விசாரணைக்காக கொழும்பு குற்றவியல் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவரான கனேமுல்ல சஞ்சீவவின் சாவு குறித்து விசாரணை நடத்துமாறு, கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி, நீதித்துறை மருத்துவ அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிணவறையில் உடற்கூறாய்வு நடைபெற்ற பின்னர், அவரது உடலை அடக்கம் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உடற்கூறாய்வுக்குப் பிறகு, சடலத்தை அவரது தாயாரிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக, துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சஞ்சீவ குமார சமரரத்ன எனப்படும்கனேமுல்லசஞ்சீவவின்சடலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, அவருடைய மூத்த சகோதரிமுன்வந்தார்என்றுதெரிவிக்கப்பட்டது.

புதன்கிழமை காலை புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் 5ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றத்திற்குள் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், கனேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்டார்.

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையிலிருந்து விசேட பாதுகாப்பின் கீழ் நேற்று புதுக்கடை பிரதான நீதிவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோதே அவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

பாதாள உலகக் குழுவின் தலைவர் எனக் கூறப்படும் கனேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பாக புதன்கிழமையே கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் பெயராக மொஹமட் அசாம் ஷெரிப்தீன் என்று பெயரை அறிவித்ததன் ஊடாக தங்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக்கூறி, கொழும்புநீதிவான் நீதிமன்றத்தில் ஒரு சீராக்கல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை மொஹமட் அசாம் ஷெரிப்தீனின் சகோதரர் தாக்கல் செய்துள்ளார். இந்தச்சீராக்கல்மனுதொடர்பாகநீதிமன்றத்தில் சாட்சியங்களை முன்வைத்த சட்டத்தரணி தசுன் பெரேரா, கனேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மொஹமட் அசாம் ஷெரிப்தீன் அல்ல என்று குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபரும் மொஹமட் அசாம் ஷெரிப்தீனும் ஒருவர் அல்லர், இரண்டு நபர்கள் என்றும் அவர் கூறினார்.

இதனால் மொஹமட் அசாம் ஷெரிப்தீனின் குடும்பத்தினர் ஏராளமான சட்ட மற்றும் சமூகப் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டுள்ளதாகக் கூறி, இது தொடர்பாக தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும் என்று சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி, இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இன்னும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை, அவரை ஆஜர்ப்படுத்தியதன் பின்னர் கோரிக்கையை சமர்ப்பிக்குமாறு சட்டத்தரணிக்குத்தெரிவித்தார்.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்பு தொடர்பான வகுப்பிற்கு கதிரையொன்றை எடுத்து வருமாறு அன்று ஜே.வி.பி. அழைப்பு விடுத்தது. ஆனால் அவர்களது அரசாங்கத்தில் நீதவான் முன்னிலையில்சந்தேகநபரைசுட்டுக்கொன்று தப்பிச் செல்லுமளவுக்கு நீங்கள் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருக்கின்றீர்களா என்று கேட்க விரும்புகின்றோம்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையசந்தேகநபர்மீதுதான்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என ஆளும்தரப்பு இதனை நியாயப்படுத்த முனையலாம். துப்பாக்கிதாரியின்குறிதவறிவேறுஎவரேனும் கொல்லப்பட்டிருந்தால் என்னவாகியிருக்கும்? அதற்கான பொறுப்பை யார் ஏற்பார்கள்?

72 ஆண்டு சாபம் தொடர்பில் இந்த ஆளும்தரப்பு இதற்கு முன்னர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருந்தது. தற்போது சாபம் யாருக்கு என்பது தெளிவாகத் தெரிகிறது.

பாதையில் தந்தையும் மகளும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு விலங்குகளைப் போன்று மனிதர்கள் சுட்டுக் கொல்லப்படுமளவுக்கு தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்துள்ளது.

எனவே, இனிவரும் நாட்களில் மக்களின் எதிர்ப்புக்களிலிருந்து உங்களைப்பாதுகாத்துக் கொள்வதற்காக விசேட அதிரடிப்படையினரை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தவேண்டிய நிலைமை ஏற்படும். மேற்குலக நாடுகளில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் துறைசார் அமைச்சர் பதவி விலகியிருப்பர். ஆனால் இவர்கள் கூச்சமின்றி ஊடகங்களுக்கு கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களானஎம்மையும், எமது வாகனத்தையும், நாம் கொண்டு செல்லும் கோப்புக்களையும் பரிசோதித்த பின்னரே நாடாளுமன்றத்திற்குள் செல்ல அனுமதிக்கின்றனர்.

அவ்வாறிருக்கையில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை அழைத்து வரும் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்குள்நுழைபவர்கள்எவ்வாறுஎவ்வித பரிசோதனையும் இன்றி நீதிமன்றத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்?

24மணித்தியாலங்களுக்குள்துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டு விட்டதாக பெருமை பேசிக் கொண்டிருக்க வேண்டாம். உங்களது இயலாமையால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு வகுப்பிற்கு கதிரையொன்றை எடுத்து வருமாறு எமக்கு அழைப்பு விடுத்த இந்த ஆளும்தரப்பை விரைவில் மக்கள் வீதியில் நிறுத்துவர் என்றார்.

## சிறையிலேயே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்களின் வேளையில் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் பதிலளித்ததாவது,

புதுக்கடை நீதிமன்றத்தில் நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவம் குறித்து தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். நடப்பு செயற்பாடுகளுக்கு அமைவாக நீதிமன்றத்துக்குள் பாதுகாப்பு தரப்பினர் ஆயுதமேந்திச் செல்வதில்லை. இவ்வாறானநிலையில்தான்நீதிமன்றத்துக்குள் அவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவம்இடம்பெற்றது.

குறித்த சந்தேகநபர் சட்டத்தரணியைப் போன்று வேடமிட்டு நீதிமன்றத்துக்குள் சென்று துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளார். நீதிமன்றத்துக்குள் ஆயுதமேந்திய படையினரை அனுமதிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்துக்குள் நுழையும் சட்டத்தரணிகளைப் பரிசோதனை செய்வதற்கும் சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளோம். கணேமுல்ல சஞ்ஜீவ என்ற நபரை பாதுகாப்பு தரப்பினர் காலி பூஸ்ஸவில் இருந்து பாதுகாப்பாகவே நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தார்கள். வீதியில் வைத்து ஏதும் நடக்கவில்லை. பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளினால் பாதுகாப்பு தரப்பினரது பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

பாதுகாப்புத்தரப்பினரின்பாதுகாப்புமற்றும் நலன்புரிவிவகாரங்கள்குறித்துவிசேடகவனம் செலுத்தியுள்ளோம். முப்படையினரினதும், பொலிஸ் தரப்பினரினதும் சம்பளம் குறித்து அவதானம்செலுத்தப்பட்டுள்ளது. கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல் சிறைச்சாலையில் இருந்தவாறு சாட்சியம் பெற்றுக்கொள்வதற்குகுற்றவியல்தண்டனைச் சட்டக்கோவையை திருத்தம் செய்யும் வகையில் அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதம் அச்சட்ட வரைபு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் - என்றார்.

## நீதிமன்றுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைக்குட்படுத்தப்பட மாட்டார்கள் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவினர் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கான பாதுகாப்பு திட்டங்களை பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேநேரம் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையினால் ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

## வியாழனன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

26ஆம்திகதிமகாசிவராத்திரியைமுன்னிட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சவுதி அரேபியாவின் ஸ்தாபகர் தினம்

(சரிப்டீன்)

சவூதி அரேபியாவின் ஸ்தாபகர் தினம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

சவூதி அரேபியா நாட்டின் நாகரீகம், கலாசாரம் மற்றும் வரலாற்றை அறிந்து கொள்ளும் நாளாக ஆக்குவதற்கு இரண்டு புனித ஸ்தலங்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல்சவுத் உத்தரவை பிறப்பித்திருந்தார். மூன்று சவூதி மாநிலங்கள் தனித்தனியாக நிறுவப்பட்டு பின்னர் ஒருங்கிணைக்கப்பட்ட நாளை இது குறிக்கிறது.



இமாம் முகமது பின் சவுத் திரியாவை தலைநகராகக் கொண்டு சவூதி இராஜ்ஜியத்தை 1727ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி நிறுவினார். இமாம் முகம்மது பின் சவூத் திரியாவை பொறுப்பேற்ற போது அங்கு ஒற்றுமையை நிலைநாட்டவும் அதனை சுற்றியுள்ள நகரங்களையும் பழங்குடியினர்களின் ஸ்தீரத் தன்மையை பாதுகாக்கவும் ஹஜ் மற்றும் வர்த்தக வழிகளையும் பாதுகாக்கவும் பங்களிப்புச் செய்தார். மாநிலத்தின் பொருளாதாரநிலைமைகளைஒழுங்கமைக்கவும் கட்டுமானங்களை விரிவுபடுத்தவும் அவரது பணி இருந்தது.

பின்னர் ரியாதை தலைநகராகக் கொண்டு இரண்டாவது சவூதி ராஜ்யத்தை கிறிஸ்துக்கு பின் 1824 இல் உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் அவர்கள் மூன்றாவது சவூதி அரசை கி.பி 1902 இல் ரியாதை தலைநகராகக் கொண்டு நிறுவியதோடு, மூன்று மாநிலங்களையும் ஒருங்கிணைத்து 1932ஆம் ஆண்டு சவூதி அரேபியா ராஜ்ஜியம் என்ற தனி நாட்டை உருவாக்கினார்.

சவூதி அரசின் உறுதியான வேர்களின் பெருமை, குடிமக்களுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பின் பெருமை, சவூதி அரசு ஏற்படுத்திய ஒற்றுமை ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பின் பெருமை, சவூதி அரசின் உறுதிப்பாடு மற்றும் எதிரிகளுக்கு எதிராக அதன் பாதுகாப்பில் பெருமை, சவூதி அரசின் தொடர்ச்சி மற்றும் அதன் வேர்கள் மற்றும் தலைவர்களின் வலிமையை மீட்டெடுப்பதில் பெருமை, மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் அல் பைசல் அல் சவூத் அவர்களால் நிறுவப்பட சவூதி அரேபியாவின் தேசிய ஒற்றுமையின் பெருமை, கட்டுமானம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் மன்னர் அப்துல் அஸீஸின் மகன்களான மன்னர்களின் சாதனைகளில் பெருமை, இமாம் முஹம்மது பின் சவூத்தின் முதல் சவூதி அரசின் நிறுவனர் என்பவைகளின் பெருமைகள் இந்த ஸ்தாபகர் தினத்தில் நினைவு கூரப்படுகின்றன.



# அல் – மினா மகாவித்தியாலத்தில் ‘பச்சை மிளகாய் ’ அறுவடை

(முகமட் இம்றான்)

கிண்ணியா அல்-மினா மகா வித்தியாலயத்தில் புதன்கிழமை பச்சை மிளகாய் அறுவை செய்யப்பட்டது.

பிரதி அதிபர் எம்.சி.ஏ. இம்தியாஸ் தலைமையில் பகுதித்தலைவர் ஏ.எச். நவாஸ் மற்றும் தௌபீக், இல்ஹாம் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

பாடசாலை சமூகத்தால் மாணவர் நலன் கருதி பயிரிடப்பட்டு பயனையும் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.



# சாய்ந்தமருதில் ‘தொழில் சந்தை’ தொழில் தேடுவோர் பதிவுசெய்க

(ஸாகிர்)

சாய்ந்தமருதில் தொழிலற்றோருக்கு தொழில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ’தொழில் சந்தை’ நிகழ்வு வியாழக்கிழமை காலை 08.30 மணி முதல் நண்பகல் 01.00 மணி வரை சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புத்துறையினின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த தொழில் சந்தையினூடாக தொழில் தேடுநர்களை இணையத்தில் பதிவு செய்தல், வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், தொழில் வழங்கும் நிறுவனத்துடன் தொழில் தேடுநர்களை இணைத்தல், தொழில் பயிற்சிநெறிக்காக மாணவர்களை இணைத்துக் கொள்ளல், நேர்முகப் பரீட்சை நடத்துதல், தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல், சுயதொழில் ஊக்குவிப்பு சேவை, தொழில் திறவுகோல் சோதனை மூலம் எதிர்கால கனவுகளுக்கு வழிகாட்டல் என்ற சேவைகளும் இந்த தொழில் சந்தை மூலம் தொழிலற்றோர்களுக்கு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை தரமுயர்வு

மடு, இரணை இலுப்பைக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் 1சி பாடசாலையாக புதன்கிழமை உத்தியோக பூர்வமாக தரமுயர்த்தப்பட்டதுடன், உயர்தர வகுப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இதுவரைகாலமும்சாதாரண தரம் வரை காணப்பட்ட குறித்த பாடசாலையை தரமுயர்த்துமாறு இப் பிரதேச மக்கள், பாடசாலைசமூகத்தினர் கடும் முயற்சி மேற்கொண்ட நிலையில் குறித்த பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது.

குறித்தநிகழ்வில்வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மடு கல்வி வலய பணிப்பாளர், மடு பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். 100





# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(சர்ஜுன் லாபீர்)

ஓரங்கட்டப்பட்ட நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஓ.என்.ரி.ஆர். நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி பங்களிப்பில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 07 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 110 ஏழை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் இரண்டாம் கட்ட நிகழ்வு புதன்கிழமை மல்வத்தை-03 மஜீட்புர வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ. வாஜீத் அலியின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே குறைசா, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உட்பட பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# “உலகை வென்றோர் வாசித்த மக்களே” சம்மாந்துறையில் பரிசளிப்பு நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை பிரதேச சபையின்கீழ் உள்ள நூலகங்கள் இணைந்து அமீர் அலி பொது நூலகத்தால் ஏற்பாடு செய்த ’உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே ’எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்புமாதத்தின் பரிசளிப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை அலுவலக பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.







சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எம். அஸீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.பஸ்மிலா, வரிப்பத்தான்சேனை பொது நூலகத்தின் நூலகர் ஏ.கே.ஜெஸ்பார், அக்கரைப்பற்று மாநகர சபை பொது நூலகத்தின் நூலகர் ஐ.எல்.எம் ஹனீபா ஆகியோர்கள் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், நூலகர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், சிறந்த வாசகர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



# திருகோணமலையில் புதிய ஆசிரியர் சங்கம்

(ஹலால்தீன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலை மாவட்டத்திற்கான புதிய ஆசிரியர் சங்க நிர்வாகத் தெரிவு அண்மையில் திருகோணாமலை விபுலானந்தா மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிர்வாகத் தெரிவு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளரான ஜோசப் ஸ்டாலின் தலைமையின் கீழ் இடம் பெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெனாண்டோ பார்வையின் கீழ் நடைபெற்ற இந்த நிர்வாக தேர்வில் தலைவராக பி. சந்திரேஸ்வரன், செயலாளராக வே.ஜெயாரத்னம் மற்றும் உயர்குழு நிர்வாக உறுப்பினராக, எம்.கே. றிப்னாஸ் முதலானோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.



# ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலராக யஹ்யாகான்

(நூருல் ஹுதா உமர்)

நாட்டை நேசிக்கும் சிறந்த மக்கள் தலைவரும் அரசியல்செயற்பாட்டாளருமான முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் உருவாகியுள்ள குறித்த கட்சியின் பொதுச்செயலாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான ஏ.சி. யஹ்யா கான் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் காரியாலயங்களில் ஒன்று சாய்ந்தமருதில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அந்த கட்சியின் பொதுச்செயலாளர் யஹ்யாகான் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அநேகமான கட்சிகள் மீது மக்கள் வெறுப்புற்றுள்ளதாகவும் மக்களது நலனுக்காக மக்களது வாக்குகளைப் பெற்று எதிர்க்கட்சிகளில் இருக்கும் சில அரசியல்வாதிகள் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்க்கும் மனோ நிலையில் இருப்பதாகவும் அவ்வாறான நிலை மாறி நாட்டையும் மக்களையும் பற்றி யோசிக்ககூடிய சிறந்தவர்கள் தங்களது கட்சியின் பக்கம் அணிதிரள்வதாகவும் மேலும் தெரிவித்தார்.

சுசந்த புஞ்சிநிலமே, பிரதி அமைச்சராக இருந்த காலங்களில் இன மத வேறுபாடின்றி அனைத்து மக்களதும் நாட்டினதும் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

நாட்டுப்பற்றுள்ள அனைத்து மக்களும் இன மத பேதமின்றி தங்களுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு கட்சியின் பொதுச்செயலாளர் ஏ.சி. யஹ்யாகான் அழைப்பு விடுத்துள்ளார்.





காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா ஷாரிக் காரியப்பர் தெரிவு

(நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)

கல்முனை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் இடம்பெற்ற 2025-26 ஆம் ஆண்டுக்கான கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முதலாவது பெண் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி ஆரிகா ஷாரிக் காரியப்பர் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கிழக்கு மாகாணத்திலேயே பிராந்திய சட்டத்தரணிகள் சங்கங்களின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் சட்டத்தரணியாக வரலாற்றில் இடம்பெறுகிறார் என்பதுடன் மேற்படி தேர்தலில் அவரை எதிர்த்து சிரேஷ்ட சட்டத்தரணிகளான யூ.எம்.நிசார் மற்றும் ஜனாப். ஐ.எல்.எம்.றமீஸ் ஆகியோர் போட்டியிட்டனர்



என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி ஆரிகா ஷாரிக் காரியப்பர், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் இலங்கை சட்டக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார்.





# சேவை நலன் பாராட்டும் பிரியாவிடை நிகழ்வும்

(ஸாகிர்)

தலைமை முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஐ.எல்.ஏ. அஸீஸ் அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் சேவை நலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை வைபவமும் பகல் போஷணத்துடன் சாய்ந்தமருது சீ ப்ரீஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

சாய்ந்தமருது கமநல சேவை நிலையத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியருமான எம்.எம்.எம்.ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்த மருது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும் நிறைவேற்றுச் செயலாளருமான அமீர் கலந்து சிறப்பித்ததுடன் முன்னாள் அதிபரும் குடாக்கரை மேற்கண்ட தலைவர் ஐ.எல்.ஏ. மஜீட்டால் இந்நிகழ்வு வழிநடத்தப்பட்டது.

ஐ.எல்.ஏ. அஸீஸ் அவர்கள், 1987.04.06 தொடக்கம் 2024.05.08 வரை சுமார் 36 வருடங்கள் சிறப்பாக சேவையாற்றியுள்ளார். அவரது சேவையைப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு சாய்ந்தமருது கமல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், கமநல சேவைக் குழு உறுப்பினர்கள், முன்னோடிக் கமக்காரர்கள், வர்த்தகர்கள் என்போரின் ஒத்துழைப்பின் பேரில் நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2025இல் வெளியிடப்பெற்றது